# <u>தூத்துக்குடி நகரமன்றம்</u>
# <u>சாதாரணக் கூட்டப்பொருள்</u>

2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10. 00 மணிக்கு 1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் அட்டவணை III விதி எண் 2(1)ன் கீழ் தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## <u>பொருள்கள்</u>

1. இந்நகராட்சி கணனிகளை வருடாந்திர பராமரிப்பு பணி 2007ம் ஆண்டிற்கு செய்ய வேண்டியதுள்ளது. அதன்படி மன்ற தீர்மானம் எண் 871 நாள் 8–8–2006ல் கடந்த வருடத்தில் பராமரிப்பு பணி மேற்கொண்ட எக்ஸல் கம்யூட்டர்ஸ் (Excel Computers) நிறுவனத்தாருக்கு உத்திரவு வழஙகப்பட்டதில் மேற்படி நிறுவனத்தின் பராமரிப்பு பணி சிறந்த முறையில் இருக்கும் பட்சத்தில் அடுத்த ஒரு ஆண்டிற்கு புதுப்பித்து வழஙகப்படும் என உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட நிறுவனத்தின் பராமரிப்பு பணி நிறைவு செய்துள்ளதாக கணனி திட்ட வினஞர் அறிக்கையின்படி Excell நிறுவனத்தின் 3–7–2007ம் தேதிய சம்மதக் கடிதத்தின் பேரிலும் இவ்வலுவலக கணனி 5 எண்ணத்திற்கு வருடாந்திர பராமரிப்பு செய்ய ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ 2000/– வீதம் (கணனி ஒன்றுக்கு) வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தையும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** 1. அனுமதிக்கலாம்,
2. செலவினம் ரூ 10,000/– பொது நிதியில் செலவினம் செய்யவும் அனுமதிக்கலாம்

இ1. 10969/06

**<u>தீர்மான எண் : 676</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

2. தூத்துக்குடி நகராட்சி வார்டு எண் 50, கதவு எண் 19, சிதாம்பரநகர் 2ம் தெருவிலுள்ள கட்டிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட சொத்துவரி விதிப்பிற்கு எதிராக திரு S.A.C உறமீது என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்துள்ள வழக்கு எண் W.P 8871./2006 வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராாக வழக்கினை நடத்துவதற்கான செலவுத்தொகை ரூ 5,000/– வழஙகும்படி வழக்கறிஞர் எஸ். ஸ்ரீமதி அவர்கள் கேட்டுள்ளார்கள். எனவே மேற்படி வழக்கு கட்டணத்தினை வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**1. <u>அலுவலகக் குறிப்பு</u>** அனுமதிக்கலாம்.

நகஎண்அ8. 17655/2006

**<u>தீர்மான எண் : 677</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

3. இந்நகராட்சி புதிய பேரூந்து நிலைய கடை எண் 62ஐ உரிமம் பெற்ற திரு பாமா காளிதாஸ் என்பவர் மேற்படி கடையை ஒப்படைப்பு செய்ய 2–6–2004ல் விண்ணப்பித்துள்ளார்.

அதன் பேரில் புதிய பேருந்து நிலைய கடை எண் 62 மே 2004 முதல் உரிமம் ரத்துச் செய்து மறு ஏலம் கொண்ட வரவும் மே 2004 முடிய உள்ள வாடகை நிலுவைத்தொகை ரூ 26,876/—ஐ நீதிமன்றத்தில் குத்தகைதாரர் மீது வழக்கு தொடரவும் அது வகைக்குரிய செலவுத்தொகையை செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்.

நகஎண்அ16. 12761/2004

**தீர்மான எண் : 678**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

4. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 விதி எண் 74 பிரிவு 'சி' யின்படி நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்படும் படிகள் மற்றும் இதர இனஙகளை வழஙக நகர்மன்றம் ஆணையாளர்க்கு அதிகாரம் வழஙகிட அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதன்படியாக நகராட்சி பணியாளர்களின் சேமநலநிதி மற்றும் அலுவல் பணியாக சென்னை மற்றும் இதர இடஙகளுக்கு செல்வதற்கான பயண படிகள் ஆகியவைகளை உரிய விதிமுறைகளின்படி சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு உடனுக்குடன் வழஙகவும், அதற்கான அதிகார அளிப்பை நகராட்சி ஆணையருக்கு வழஙக மன்றம் தீர்மானிக்கலாம். மற்றும் இதன் அடிப்படையிலே ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட நிதிகளுக்கும் மன்றம் அனுமதி வழஙக வேண்டப்படுகிறது.

**குறிப்பு** தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 74 'சி' இன்படி மன்றம் ஆணையாளருக்கு அதிகார அளிப்பு வழஙகலாம்.

நகஎண் பி5. 23192/07

**தீர்மான எண் : 679**

அலுவலகக் குறிப்புப்படி அதிகார அளிப்பு வழஙகப்பட்டது.

5. இந்நகராட்சிப் பகுதியில் வார்டு 28, ஆண்டாள் தெரு கதவு எண் 59 கட்டிடத்தில் அமைந்துள்ள அபிராமி மஉறால் கட்டிடத்திற்கு நிர்ணயம் செய்த சொத்துவரி அதிகம் என்றும் மேற்படி வரியை குறைக்க கோரி தூத்துக்குடி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண் ஓஎஸ் 488/07ல் மேற்படி கட்டிடத்தின் உரிமையாளர் திரு என். சந்திரசேகரன் மற்றும் திருமதி சி. பிரேமலதா ஆகியோர் இந்நகராட்சிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

எனவே இவ்வழக்கில் இந்நகராட்சி தரப்பில் நீதிமன்றத்தில் இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு என். செல்வராஜ் பிஎஸ்சி.,பிஎல்., ஆஜராகவும் இவ்வழக்கை ஏற்று நடத்தவும் இவ்வழக்கின் செலவுத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

நகஎண்சி3. 22541/2007

**தீர்மான எண் : 680**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

6. இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண் 58ஐ திரு பாண்டுமூர்த்தி என்பவர் பொது ஏல அடிப்படையில் வாடகைக்கு எடுத்து தொழில் நடத்தி வந்த காலஙகளுக்கு நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கடை வாடகையை செலுத்தாததால் மேற்படியார் மீது நகராட்சி தரப்பில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓஎஸ்.எண் 233/04 என்ற வழக்கு எண்ணில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்கின் எதிர் மனுதாரர் காலமாகி விட்டபடியால் அன்னாரின் வாரிசுதாரர்கள் வழக்கில் தெரிவித்துள்ள தொகை ரூ 58,219/—ஐ நகராட்சிக்கு செலுத்த கோரி 13—7—2007ல் மேற்படி நீதிமன்றம் உத்திரவு வழஙகியுள்ளது.

மேற்படி நீதிமன்ற உத்திரவினை எதிர்த்து எதிர் மனுதாரரின் மனைவி திருமதி சோலையம்மாள் மற்றும் வாரிசுதாரர்கள் ஆகியோர் சேர்ந்து தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் A.S. 133/07 என்ற வழக்கு எண்ணில் நகராட்சிக்கு எதிராக மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

எனவே மேற்படி மேல்முறையீடு வழக்கில் இந்நகராட்சி தரப்பில் இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு செல்வராஜ் பிஎஸ்சி பிஎல் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகவும். இவ்வழக்கினை ஏற்று நடத்தவும் இவ்வழக்கின் செலவுத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

நகஎண்சி3. 21730/07

**<u>தீர்மான எண் : 681</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

7. தூத்துக்குடி நகராட்சி லெவஞ்சிபுரம் நகராட்சி தொடக்கப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக கடந்த 30—6—2006ல் ஓய்வுபெற்ற திருமதி கே. சுயம்புகனி என்பவர் தமது பணிக்காலத்தில் நகராட்சி அலுவலகத்தில் செலுத்திய சிறப்பு சேமநலநிதி தொகை ரூ 2640/— இதற்கான வட்டித்தொகை ரூ 1572/— ஆக மொத்தம் ரூ 4212/— அன்னாருக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

நகஎண்சி4. . 14398/2007

**<u>தீர்மான எண் : 682</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புதல் செய்யப்பட்டது.

8. இந்நகராட்சிக்கு தினசரி வசூலாகும் தொகைகளை எண்ணுவதற்கும் மற்றும் தவறுதலாக வரப்பெறும் பணஙகளை சரிபார்ப்பதற்கும் உரிய இயந்திரம் வாஙகுவது மிக அவசியமாகிறது. இவ் இயந்திரம் தற்போது நகராட்சியில் இல்லாததால் இதனால் வசூல் பணியில் பணம் எண்ணுவதில் சில நேரஙகளில் நிர்வாக இடையூறு ஏற்படுகிறது. ஆகவே பணம் எண்ணும் இயந்திரம் ஒன்று நகராட்சியின் உபயோகத்திற்கு வாஙகுவது மிக அவசியமாக உள்ளது. இவ் இயந்திரத்தை ரூ 40,000/— செலவினத்தில் நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வாஙகவும் இதனை ஒப்பந்தப்புள்ளி மூலம் பெற்று வாஙகிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

இ1. 22747/07

**<u>தீர்மான எண் : 683</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

**9.** இந்நகராட்சியின் தொலைபேசி அறையில் பொருத்தப்பட்டுள்ள தொலைபேசி இண்டர்காம் வசதி **3** வருடங்கள் ஆகி விட்ட நிலையில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதாலும் சில சமயங்களில் அதிக அளவு மின்சாரம் நுகரப்படுவதாலும் இண்டர்காம் LCE. CPV மற்றும் ஆப்பரேட்டர் கன்ட்சோல் அமைப்பதில் பழுது ஏற்பட்டுள்ளது. ஆதலால் புதியதாக EPAOX மற்றும் operation console வாங்கி பொருத்தவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ **60,000/–**க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>** அனுமதிக்கலாம் இ1. 22228/07

**<u>தீர்மான எண் : 684</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

**10.** திருநெல்வேலி பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் **2006–07**ஆம் ஆண்டுக்கு பாத்திமாநகர் சமுதாயக்கூடம் கட்டும் பணிக்காக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தூத்துக்குடி செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் கீழ்க்கண்ட இரண்டு தின நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1. தினத்தந்தி | ரூ 2,988/– |
| 2. தினகரன் | ரூ 3,390/– |
| மொத்தம் | ரூ 6378/– |

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம் இ1. 3602/05

**<u>தீர்மான எண் : 685</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

**11.** இந்நகராட்சியில் பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை கீழ்க்கண்ட நாட்களில் நாளிதழ்களில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தூத்துக்குடி மூலம் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான செலவினத்திற்கு. மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| 1. 29–8–2007 | தினத்தந்தி | ரூ 3237 .00 |
| 2. 29–8–2007 | தமிழ்சுடர் | ரூ 1050 . 00 |
| 3. 14–9–2007 | தினத்தந்தி | ரூ 1826. 00 |
| 4. 22–8–2007 | தினத்தந்தி | ரூ 2988. 00 |
| 5. 22–8–2007 | தமிழ்சுடர் | ரூ 975. 00 |

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்

மபஎண் 67/2007–08

**<u>தீர்மான எண் : 686</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

**12.** இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் ஒன்றான “மாவட்ட கருவூலம்” கட்டிடத்தில் பழைய வயரிங்கள் மோசமான நிலையில் இருப்பதால் புதியதாக வயரிங செய்யப்படல் வேண்டும். தற்போது புதியதாக கணனிகள் , கணனிகள் தொடர்புடைய சாதனங்கள் பொருத்த வேண்டியதிருப்பதால் MCCB மற்றும் கூடுதல் பழுதாங்கக் கூடிய

வகையில் வயரிங செய்யப்படல் வேண்டும். அவ்வாறு கட்டடம் முழுமைக்கும் செய்து முடிக்க ஆகும் தோராய செலவுத்தொகை ரூ 50,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

இ3. 020599/07

**தீர்மான எண் : 687**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

13. இந்நகராட்சிக்கு சொந்தமான பாளையஙகோட்டை ரோடு கழிவுநீர் நீரேற்றும் நிலையத்திலுள்ள கிணறுகளில் முக்கால் பகுதிக்கும் மேல் மணல் அடைத்துள்ளதால் இரண்டு கிணறுகளிலும் தூர் வார ஆகும் செலவுத்தொகை ரூ 5,000/— க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது. மேலும் மேற்படி மண்ணை தூர்வார 05—11—2007ல் விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| ஒப்பந்தக்காரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|
| 1. கே. அய்யனார் | ரூ 4950/— |
| 2. திருபி. சஙகரலிஙகம் | ரூ 5000/— |
| 3. திரு கே. ராஜ் | ரூ 5800/— |

மேற்கண்ட விபரப்படி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் கே. அய்யனார் தூத்துக்குடி விலைப்புள்ளி ரூ 4950/— உள்ளூர் சந்தை நிலவரத்தை ஒத்துள்ளதால் இதனை மன்றம் அஙகீகரிக்க வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

இ3. 22306/07

**தீர்மான எண் : 688**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

14. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், வாகன ஓட்டுநர்கள், தினக்கூலி பணியாளர்களுக்கு 2007ம் வருடத்திற்கான காலனிகள் வழஙக உத்தேச செலவுத்தொகை ரூ 1. 50 இலட்சத்திற்கும், தூத்துக்குடி காதி நிறுவனத்திலிருந்து வாஙகவும். மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்.

எச்4. 91/2007

**தீர்மான எண் : 689**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

15. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் வாகன துலக்குநராக பணிபுரிந்து 27—6—2007ம் தேதியன்று பணியிடையில் மரணமடைந்த திரு ஊ. சந்தனபால் என்பவரின் சிறப்பு சேமநலநிதித் தொகை ரூ 11,144/— (ரூபாய் பதினொன்றாயிரத்து நூற்று நாற்பத்தி நான்கு மட்டும்) சந்தா தொகை ரூ 2960 + வட்டி ரூ 8184) ஐ அன்னாரின் வாரிசும், மனைவியுமான திருமதி பொன்னம்மாள் என்பவருக்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு** பணியிடை மரணமடைந்ததால் சந்தா மற்றும் வட்டித்தொகை ரூ 11,114/— மட்டும் அனுமதிக்கலாம்.

தொமு7.21669/2007

**<u>தீர்மான எண் : 690</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

16. இந்நகராட்சி பொது சுகாதார மலேரியா பிரிவிற்கு தேவையான கொசு மருந்தினை இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் மருந்து தடுப்புத்துறை சென்னையிலிருந்து இலவசமாக FENTHION 100 லிட்டரும் TEMEPHOS 100லிட்டரும் ஏபிடி பார்சல் சர்வீஸ் மூலம் லாரி கட்டணத்தொகை செலுத்தி எடுக்கும் வகையில் அனுப்பி வைக்கப்பட்டது. லாரி கட்டணம் மற்றும் இறக்கு கூலியாக ரூ 1090/– (ரூபாய் ஆயிரத்து தொண்ணூறு மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**குறிப்பு**

1. இயக்குநர் பொது சுகாதாரத் துறையிலிருந்து இலவசமாக நகராட்சிக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே லாரி கட்டணம் மற்றும் இறக்குகூலி கட்டணத்தை வழஙக அனுமதிக்கலாம்.

2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை எடுத்ததையும் அனுமதிக்கலாம்.

எச்1. 20294/2007

**<u>தீர்மான எண் : 691</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

17. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் 13–8–2006ம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் தூத்துக்குடி நகராட்சிப் பகுதியில் கூடுதல் குடிநீர் விநியோகம் அபிவிருத்தி திட்டம் தயார் செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண் 51218/06/WS2 நாள் 31–8–2006ம் தேதிய கடிதத்தில் TNIFSL மூலமாக கடனுதவி பெற்று செயல்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் கூடுதல் அபிவிருத்தி திட்டத்திற்கு கீழ்க்கண்ட பணிகள் செய்வதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே பணிகள் செய்வதற்கும் அதற்குரிய ரூ 269 இலட்சத்திற்கு கடன் உதவி கோரி முன்மொழிவுகள் மற்றும் கடன் விண்ணப்பம் பூர்த்தி செய்து நிர்வாக அனுமதி பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | உத்தேச மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் Transformer 500 KVA உள்ளதை 800 KVA ஆக மாற்றி அமைத்தல் | 45. 00 |
| 2 | நகருக்கு வரும் குடிநீர் மெயினில் 1வது பைப் லைன் புதுக்கோட்டை ஊராட்சிப் பகுதியில் 2. 00 கி.மீ. நீளத்திற்கு 400 mm 10 KSC P.S.C பைப் அமைக்கும் பணி | 50. 00 |
| 3 | ரிட்ஜ் பாயிண்ட் அருகில் 10LL sump அமைக்கும் பணி | 47. 00 |
| 4 | கிராவிட்டி மெயின் மற்றும் பம்பிங மெயின் பகுதியில் ஏர் வால்வுகள் (Kinetic Air Valve) 13எண்ணஙகள் அமைக்கும் பணி | 5. 00 |
| 5 | ராஜாஜி பார்க்கில் Primary arrangement முறையில் மின் மோட்டார் 4 எண்ணம் அமைக்கும் பணி மற்றும் அதற்குரிய | 6. 50 |

| | | |
|---|---|---|
| | சாமான்கள் அமைத்தல் | |
| 6 | நகரில் விடுபட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோக சப்ளை மெயின் மற்றும் மண்டலஙகளிலுள்ள பீடர் மெயின் ஆகியவற்றில் CI & AC மெயின் மாற்றி அமைக்கும் பணி | 84. 00 |
| a | ராஜாஜி பார்க் நீரேற்று நிலையம் முதல் கணேஷ்நகர் வரை பீடர் மெயின் மாற்றி அமைக்கும் பணி | 14. 00 |
| b | வி.வி.டி.நீரேற்று நிலையத்தின் முதல் அழகேசுபுரம் வரை பீடர்மெயின் மாற்றி அமைக்கும் பணி | 2. 00 |
| c | திரேஸ்புரம் பகுதி பைப் மாற்றி அமைக்கும் பணி | 3. 00 |
| d | மேலசண்முகபுரம் பகுதி பீடர் மெயின் மாற்றி அமைக்கும் பணி | 7. 50 |
| e | எட்டையாபுரம் ரோடு ரகுமதுல்லாபுரம் மேற்கு, வடக்கு ரதவீதி பீடர் மெயின் மாற்றி அமைக்கும் பணி | 4. 50 |
| f | பூபாலராயர்புரம் பகுதியில் பீடர் மெயின் மாற்றி அமைக்கும் பணி | 6. 50 |
| g | நகரில் விடுபட்ட பகுதிகளிலும் குடிநீர் விநியோக சப்ளை மெயின் பழுதானது மாற்றி அமைக்கும் பணி | 46. 50 |
| | மொத்தம் | (84. 00 லட்சஙகள்) |
| 7 | வல்லநாடு தலைமை நீரேற்று நிலைய அலுவலர் குடியிருப்புகள் 7 மற்றும் தலைமை நீரேற்று நிலைய தெப்பக் குளத்தில் 2 எண்ணம் ஆக மொத்தம் 9 எண்ணம் குடியிருப்புகள் கட்டும் பணி | 31. 50 |
| | ஆக மொத்தம் | 269. 00 லட்சஙகள் |

**அலுவலகக் குறிப்பு** 1. அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளை TNUDF (TNIFSL) அவர்களிடமிருந்து கடன் உதவி பெற்று மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணியினை செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிகள் வஎண் 1, 2, 3, 6 (a) (G) மற்றும் 7க்குரிய பணிகளை நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையாளர் பெற்று பணியினை செய்யலாம்.
4. கடன் விண்ணப்பம் பூர்த்தி செய்து TNUDF (TNIFSL) அவர்களுக்கு அனுப்பலாம்.

இ3. 7356/06

**<u>தீர்மான எண் : 692</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2, 3 மற்றும் 4 அனுமதிக்கப்பட்டது.

18. இந்நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண் 882 நாள் 14–8–2006ல் 2006–07ஆம் ஆண்டிற்கான தெருவிளக்கு பராமரிப்புக்கு ரூ 20/–இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழஙகியுள்ளது. கடந்த ஆண்டில் 20 இலட்சத்திற்கும் அதிகமாக கூடுதலான செலவுத்தொகை ரூ 3,19,827/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** கூடுதல் செலவினத்தொகை ரூ 3,19,827க்கு மன்றம் அனுமதி வழஙகலாம்.

இ3. 13385/06

**<u>தீர்மான எண் : 693</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.

19. துணை இயக்குநர், சுகாதாரம், காஞ்சிபுரம் அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள இந்நகராட்சிக்கு தேவையான Temphos என்ற கொசு ஒழிப்பு மருந்து 100 லிட்டர் ஏபிடி பார்சல் சர்வீசஸ் மூலம் வரப்பெற்றுள்ளதற்கு பார்சல் கட்டணம் உட்பட செலவுத்தொகை ரூ 557/–ஐ செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** 1. அனுமதிக்கலாம்
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கட்டணம் செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

நகஎண் எச்4. 22075/07

**தீர்மான எண் : 694**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

20. இந்நகராட்சிக்குச் சொந்தமான இந்திரா நகர் தொம்மையார் கோவில் தெரு பள்ளமான பகுதியில் சிவப்பு சரள் விரிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ 50,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதி வழஙகலாம்

மபஎண் 170/2007–08

**தீர்மான எண் : 695**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.

21. இந்நகராட்சிக்குச் சொந்தமான போல்டன்புரம் கிழமேல் சாலையில் தார்சாலை மற்றும் ஓரஙகளில் சிவப்பு சரள் விரிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.2, 30,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதி வழஙகலாம்

மபஎண் 176/2007–08

**தீர்மான எண் : 696**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.

22. இந்நகராட்சிக்குச் சொந்தமான V.O.C மார்கெட்டில் மீன் வியாபார கொட்டகை மற்றும் மின்சாரம், தண்ணீர் வசதி செய்திடும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ 6,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதி வழஙகலாம்

மபஎண் 177/2007–08

**தீர்மான எண் : 697**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.

23. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள போல்டன்புரம் பிரதான சாலை பழுதடைந்துள்ளதால் அதனை சீரமைத்து புதிதாக தார்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ 4,35,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதி வழஙகலாம்

மபஎண் 175/2007–08

**<u>தீர்மான எண் : 698</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.

24. இந்நகராட்சிக்குச் சொந்தமான போல்பேட்டை டி.எம்...சி காலனியில் புதிதாக பொது கிணறு அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ 25,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதி வழஙகலாம்

மபஎண் 178/2007–08

**<u>தீர்மான எண் : 699</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.

25. இந்நகராட்சிக்குச் சொந்தமான வடக்கு பத்திரகாளியம்மன் கோவில் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் தளம் மற்றும் சிறுபாலம் கட்டுதல், வடிகால் உயர்த்தி கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ 1,15,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதி வழஙகலாம்

மபஎண் 171/2007/08

**<u>தீர்மான எண் : 700</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.

26. இராஜாஜி பூஙகா நீரேற்றும் நிலையத்தில் அமைந்துள்ள குரூஸ்புரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றும் 40 கு.வேக திறன் மின் மோட்டாரின் காயில் சுற்றும் பணி Fan மற்றும் பேரிஙகு மாற்றும் பணிகளுக்கு பிரிவு 15–இன் கீழ் செலவிடப்பட்ட செலவினத்தொகை ரூ 14900/–ஐ மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** மன்றம் பதிவு செய்யலாம்

இ3. 020578/07

**<u>தீர்மான எண் : 701</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது.

27. இந்நகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூஙகா நீரேற்றும் நிலையத்தில் இராஜாஜி பூஙகா மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிக்கு நீரேற்றும் 40 கு.வே. திறன் மின்மோட்டாரின் காயில் சுற்றும் பணிக்கு அவசர அவசியத்தை முன்னிட்டு பிரிவு 15–இன் கீழ் செலவிடப்பட்ட செலவினத்தொகை ரூ 13,850/– மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் பதிவு செய்யலாம்

இ3. 020574/07

**<u>தீர்மான எண் : 702</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது.

28. இந்நகராட்சிப் பகுதி எஸ்.எஸ். மாணிக்கபுரம் பகுதியில் பொது நிதியிலிருந்து தார்தளம் அமைக்கும் பணிக்கு 14–11–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

1) திரு இன்னாசிமுத்து மதிப்பீட்டுற்கு டேவணித் தொகை

ரூ. 0. 12% குறைவு செலுத்தியுள்ளார்

2) திரு ஐ. ஜெயசீலன் மதிப்பீட்டுற்கு டேவணித் தொகை
ரூ 3. 48% அதிகம் செலுத்தியுள்ளார்

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 304 தேதி 29–5–07ல் ரூ. 5,30,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 12% குறைவானதுமான திரு எஸ். இன்னாசிமுத்து என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 11/07–08

<u>**தீர்மான எண் : 703**</u>

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது.

29. இந்நகராட்சிப் பகுதி இன்னாசியார்புரம் 3வது தெருவில் பொது நிதியிலிருந்து மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு 14–11–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

1) திருஎஸ், இன்னாசிமுத்து மதிப்பீட்டுற்கு டேவணித் தொகை
ரூ. 0. 08குறைவு செலுத்தியுள்ளார்

2) திரு ஐ. ஜெயசீலன் மதிப்பீட்டுற்கு டேவணித் தொகை
ரூ 0.45% அதிகம் செலுத்தியுள்ளார்

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 75 தேதி 22–2–07ல் ரூ. 3, 50,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 08% குறைவானதுமான திரு எஸ். இன்னாசிமுத்து என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 116/ 06–07

<u>**தீர்மான எண் : 704**</u>

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது.

30. இந்நகராட்சிப் பகுதி கிருஷ்ணராஜபுரம் மெயின் சாலையில் தெருவில் பொது நிதியிலிருந்து மழைநீர் வாருகால் அமைக்கும் பணிக்கு 14–11–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

1) திருமதிஎஸ்.சாந்தி அருட்லா மதிப்பீட்டுற்கு டேவணித் தொகை
நிர்மலா தேவி ரூ. 0. 54 %குறைவு செலுத்தியுள்ளார்

| | | |
|---|---|---|
| 2) திரு எஸ்.பி. முருகையா பாண்டியன் | மதிப்பீட்டுற்கு ரூ 0.69% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 309 தேதி 29–5–07ல் ரூ. 4, 00,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 54% குறைவானதுமான திருமதி சாந்தி அருட்லா நிர்மலாதேவி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 12/ 07–08

<u>**தீர்மான எண் : 705**</u>

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது.

31. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள மில்லர்புரம் பிரதான சாலையின் மேற்கு பக்கம் சாலை மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளதால் மேற்கண்ட சாலையினை தார்சாலையாக புதுப்பிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 1,12,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>**அலுவலகக் குறிப்பு**</u> மன்றம் அனுமதி வழஙகலாம்

ம.ப.எண் 138/2007–08

<u>**தீர்மான எண் : 706**</u>

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.

32. தூத்துக்குடி நகர் சத்திரத் தெருவில் IDSMT திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்பட்டுள்ள கல்யாண மண்டபம் ISO சான்று பெற மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 13–10–2007 க்குள் ஆய்வுக் கூட்டத்தின் போது தெரிவித்ததின்படி செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுதுறை சென்னை அவர்களும் உடன் நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டதின்படி சென்னை ஸ்ரீ பணிக்கர் கன்சல்டன்ட் அவர்களது SPMC/Q/TMCH/2007/08 20–8–2007 ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப் பட்டதின்படியும் சான்று பெறுவதற்காக உரிய கட்டணம் ரூ 1,05,000/– செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>**அலுவலகக் குறிப்பு**</u> அனுமதிக்கலாம்

இ1. 20076/04

<u>**தீர்மான எண் : 707**</u>

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

33. நகராட்சிப் பகுதியில் உள்ள அஙகீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்த 31–12–2007 வரை கால நீடிப்பு செய்து வரப்பெற்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுதுறை (ந.நி.1) துறை அரசாணை (நிலை) எண் 56 நாள் 30–4–2007 மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

ஜி1. 13033/06

**தீர்மான எண் : 708**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது.

**34.** இந்நகராட்சியின் பதிவுப்பெற்ற ஒப்பந்தக்காரர் திரு ஐ. ஜெயசீலன் என்பவர் பல்வேறு பணிக்காக முன் வைப்புத்தொகை செலுத்தியுள்ளார். அன்னார் செலுத்திய தொகைகள் கீழ்க்கண்ட விபரப்படி காலங்கடந்த வைப்புத்தொகை கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. எனவே அத்தொகையை திருப்பி வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. Est No.. 53–2003–04 ரூ. 11750/–
2. Est No.. 205–2003–04 ரூ. 7333/–
3 Est No.. 223–2003–04 ரூ. 13096/–

––––––––

32,179/–

––––––––

**அலுவலகக் குறிப்பு 1.** மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி தொகை வழங்க தணிக்கையில் ஆட்சேபணை இல்லாததால் இதனை அனுமதிக்கலாம்

நகஎண் 002882/07/பி3

**தீர்மான எண் : 709**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

**35.** இந்நகராட்சி பொது சுகாதார மலேரியா பிரிவிற்கு தேவையான மலேரியா கொசு மருந்து கைதெளிப்பான் மற்றும் மலேரியா கொசு புகை மருந்து தெளிப்பான் வாங்க நகர்மன்ற தீர்மானம் எண் 546 நாள் 26–09–2007ல் அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 02–11–2007ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. இரண்டு நிறுவனங்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி கீழ்க்கண்ட விபரப்படி வழங்கியுள்ளனர்.

| வஎண் | தெளிப்பான்கள் விபரம் | மெசர்ஸ் க. கனகசபாபதி முதலியார் சன்ஸ் 359, சுவாமி சன்னதி பஜார், தென்காசி | மெசர்ஸ் நியுபிரேட் ஆல்ஸ்பிரேயர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ், 430 மெயின் ரோடு, துக்காப்பேட்டை திருவண்ணாமலை மாவட்டம் |
|---|---|---|---|
| 1 | கைதெளிப்பான் 16 லிட்டர் கொள்ளவு சதுர வடிவ பித்தளை டேங்க் கொண்ட கைதெளிப்பான் அடிபம்பு தெளிப்பானிக் மேல் பகுதியில்அமைந்து முதுகு பின்புறம் அமைத்துக்கொள்ள வசதியான பெல்ட் அமைப்பு உடையது | ரூ 6930/– (ரூபாய் ஆறாயிரத்து தொள்ளாயிரத்து முப்பது மட்டும் | ரூ 7050/– (ரூபாய் ஏழாயிரத்து ஐம்பது மட்டும்) |
| 2 | புகை மருந்து தெளிப்பான் Pulse spart starting portahle fogging machine with the following | ரூ. 59750/– (:ரூபாய் ஐம்பத்தொன்பதாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) | ரூ 59550/– (ரூபாய் ஐம்பத்தொன்பதாயிரத்து ஐந்நூற்றி ஐம்பது |

| | | | |
|---|---|---|---|
| | specification suitable for fixing in the tricycle<br>1.Type-Pulse spark fogging machine<br>2. Capacity of fuel tank- 2ltrs<br>3. Capacity of Chemical tank – 7ltrs<br>4. Fuel consumpting – 1ltr/hr<br>5. Fog pressure 3 to 4 psi<br>6. Output of the engine- 8.5 to 9.5 decibles<br>7. Effect throwing range- 25 mtrs<br>8. Area coverage per hour-10 acre<br>9. Particle size- 18 to 32 microns<br>10. Empty weight- 7 Kgs<br>11. Petro tank fog tube and formulation tank made by stainless steel | | மட்டும்) |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்

**<u>குறிப்பு</u>**

மெசர்ஸ் க. கனகசபாபதி முதலியார் சன்ஸ், தென்காசி நிறுவனம் கீழ்க்கண்ட விபரப்படி மலேரியா கொசு மருந்து கைத்தெளிப்பானுக்கு ரூ 6930/– என்று குறைந்த விலைப்புள்ளியும் மெசர்ஸ் நியுபிரேட் ஆல்ஸ்பிரேயர் மெக்கானிக்கல் ஓர்க்ஸ், 430 மெயின் ரோடு, துக்காப்பேட்டை, திருவண்ணாமலை மாவட்டம் மலேரியா கொசு புகை மருந்து தெளிப்பானுக்கு ரூ 59,550/– என்ற குறைந்த விலைப்புள்ளியும் வழங்கியுள்ளார்கள். சுகாதார ஆய்வாளர் (மலேரியா) மேற்கண்ட குறைந்த விலைப்புள்ளிகள் உள்ளூர் விலைகளுக்கு சமமாக இருப்பதாக அறிக்கை வழங்கியுள்ளார். எனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்களிடம் கைதெளிப்பான் மற்றும் புகை மருந்து தெளிப்பான்கள் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

எச்1. 16212/2007

**<u>தீர்மான எண் : 710</u>**

அலுவலகக் குறிப்புப்படி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்களிடம் கைதெளிப்பான் மற்றும் புகை மருந்து தெளிப்பான்கள் வாங்க அனுமதிக்கப்பட்டது.

**36.** இந்நகராட்சிக்குச் சொந்தமான வல்லநாடு தலைமை நீர்ப்பணியிடத்தில் தாமிரபரணி ஆற்றுப்படுகையில் அமைந்துள்ள நிர் உறிஞ்சும் கிணறு எண் II ல் நிமிடத்திற்கு 8000 லிட்டர் நீர் இறைக்கும் திறன்கொண்ட 40 கு.வேக மின்மோட்டார்கள் இரண்டிற்கும் கூடுதல் (Spare) மோட்டார் இல்லாததாலும், மேற்கண்ட மின் மோட்டார்களின் மின் துவக்கிகள் (Starter)பழுதடைந்துள்ளதாலும் ஒரு புதிய 40 கு.வேக மின் மோட்டார் வாங்கி தயார் நிலையில் இருப்பில் வைத்துக்கொள்ளவும், பழுதான மின் துவக்கிகளுக்கு பதிலாக இரண்டு புதிய 40 H.P.ஆட்டோமெட்டிக் starter வாங்கி பொருத்திட ஆகும் உத்தேச செலவீனம் ரூ 3/– லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்

நகஎண் 023604/07/இ3

**<u>தீர்மான எண் : 711</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

37. தூத்துக்குடி நகராட்சிப் பகுதியில் இயற்கை சீற்றஙகளால் பாதிக்கப்பட வாய்ப்புள்ள திரேசபுரம் மற்றும் பூபாலராயர்புரம் பகுதிகளில் 201 மீட்டர் முதல் 1000 மீட்டர் வரையிலான கடல் உயர் அலை மட்ட எல்லைக்குள் இயற்கை சீற்றஙகளினால் பாதிக்கப்பட வாய்ப்புள்ள வீடுகளுக்கு பதிலாக நிரந்தர மாற்றுக் குடியிருப்புகள் ஏற்படுத்தி தருவது தொடர்பான பயனாளிகள் பட்டியல் கீழ்க்கண்ட விபரப்படி தூத்துக்குடி வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | தெருவின் பெயர் | பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | திரேசபுரம் | 68 |
| 2 | பூபாலராயர்புரம் | 34 |
| | ஆக மொத்தம் | 102 |

மேற்கண்ட 2 தெருக்கள் நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ளதால் அதிலுள்ள மொத்த பயனாளிகள் 102 பேர்களுக்கு நிரந்தர மாற்றுக் குடியிருப்புகள் ஏற்படுத்தி தருவது தொடர்பாக ஆட்சேபணை ஏதும் இருப்பின் சம்பந்தப்பட்டவர்கள் எழுத்து மூலம் 07–11–2007ஆம் தேதி முதல் 15–11–2007ஆம் தேதி வரை நகராட்சிக்கு விண்ணப்பம் செய்யுமாறு கடந்த 07–11–2007ம் தேதி மேற்படி பயனாளிகள் பட்டியல் இந்நகராட்சி விளம்பர பலகையில் விளம்பரம் செய்யப்பட்டதில் இது தொடர்பாக எந்த ஆட்சேபனை விண்ணப்பமும் இந்நகராட்சி பெறப்படவில்லை.

எனவே மேற்கண்ட பயனாளிகள் பட்டியல் தூத்துக்குடி நகர்மன்ற ஒப்புதல் பெற்று மீள சமர்ப்பிக்க தூத்துக்குடி வட்டாட்சியர் கேட்டுக்கொண்டதன் பேரில் மேற்படி பயனாளிகள் பட்டியலை ஒப்புதல் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** அனுமதிக்கலாம்

எப்6. 15423/07

**<u>தீர்மான எண் : 712</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

38. மனுதாரர் திரு எஸ். சஙகர் மாரிமுத்து என்பவர் சர்வே வார்டு சி, பிளாக் 38 நகரளவு எண் 3/1 பகுதியில் அஙகீகரிக்கப்பட்ட “ அண்ணா” விரிவு அபிவிருத்தித் திட்டத்தில் அமைந்துள்ள இடத்தினை குழந்தைகள் விளையாடும் பொது ஒதுக்கீட்டிலிருந்து (Children play space) குடியிருப்பு பகுதியாக திட்டமாற்றம் செய்ய கோரியுள்ளார்.

மனுதார் சமர்ப்பித்துள்ள பத்திர நகலில் 41. 95 சென்ட் (1697. 70 ச.மீ) மனை மனுதார்க்கு பாத்தியமானது. ஆனால் அதில் ஒரு பகுதி 304. 70 ச.மீட்டர் பரப்பளவு இடம் மீளவிட்டான் கிராமப் பகுதியிலும், மீதியுள்ள 1393 ச.மீ. (34. 42 சென்ட் ) மனை நகராட்சிப் பகுதியிலும் அமைகிறது. நகராட்சிப் பகுதியில் அமையும் இடமானது அஙகீகரிக்கப்பட்ட “அண்ணா” விரிவு அபிவிருத்தித்திட்டத்தில் குழந்தைகள் விளையாடுமிடமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி இடம் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவிலுள்ள பொது ஒதுக்கீடு இல்லை எனவும், கிரையம் மூலம் தனக்கு பாத்தியமானது எனவும், தன்னுடைய இடத்தின் தெற்கு பகுதியிலிருந்து சுமார் 15. 00 மீட்டர் தொலைவில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு ம.வ. / ந.ஊ.இ. எண் 681/91 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பகுதி உள்ளதாகவும் இந்த இடத்தை தவிர வேறு இடம் இல்லாததாலும், விரிவு அபிவிருத்தித் திட்டத்தில் குழந்தைகள் விளையாடுமிடமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை குடியிருப்பு பகுதியாக திட்டமாற்றம் செய்து தரும்படி கோரியுள்ளார்.

மனுதார் குறிப்பிட்டுள்ள இடத்தினை குழந்தைகள் விளையாடும் பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்வதற்கு உரிய வழியாக அனுப்பி வைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> விளையாடும் இட உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோக மாற்றத்திற்கு பரிந்துரை செய்து உள்ளூர்த்திட்டக் குழுமம் வழியாக நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 20897/07

**<u>தீர்மான எண் : 713</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

**39.** தந்தை பெரியார் சிலை அமைப்புக் குழுத் தலைவர் திரு கனகராஜ் என்பவர் தென்பாகம் காவல்நிலையம் அருகில் அம்பேத்கார் சிலை அருகிலுள்ள ரவுண்டானாவில் பெரியார் சிலை அமைக்க அனுமதி கோரியுள்ளார்.

தென்பாகம் காவல் நிலையம் அருகிலுள்ள ரவுண்டானாவில் சிலை அமைக்க கோரப்பட்டுள்ள இடம் பாளையங்கோட்டை ரோட்டிலிருந்து (நெடுஞ்சாலைத்துறை) பிரியும் தென்வடல் சாலையில் அமைகிறது. மேற்படி இடம் சர்வே வார்டு 2, பிளாக் 22, நகரளவு எண் 2881/2ல் அமைகிறது. மேற்படி இடத்தில் பெரியார் முழு உருவ வெண்கலசிலை அமைக்கவும் மேற்படி சிலையின் பராமரிப்பு பணிகள் அனைத்தையும் சிலை அமைப்புக்குழுவே மேற்கொள்வதாகவும் , உறுதிமொழி அளித்துள்ளார்கள். மேலும் போக்குவரத்துக்கு இடையூறு இல்லை என மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் தடையின்மை சான்று பெறப்பட வேண்டுமெனவும், மேலும் கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத்துறையினரிடமிருந்து தடையின்மை சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டுமென்றும், மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுதுறையின் 20–11–1998ம் தேதிய அரசாணை (நிலை) எண் 221–ன்படி சிலை வெண்கலத்தால் அமைக்கப்பட வேண்டும் என்பதற்கும், சிலை பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பொறுப்பை தானே ஏற்றுக்கொள்வதாக தெரிவித்ததின் பேரில் சிலை வைக்கும் கோரிக்கையை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் வாயிலாக அரசின் அனுமதி கோரி அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> விண்ணப்பத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மூலமாக அரசுக்கு அனுப்பி வைக்கலாம்.

எச்1. 20745/07

**<u>தீர்மான எண் : 714</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

**40.** புதிய பேரூந்து நிலைய வளாகத்தினுள் சுகாதார கேடுகளை தவிர்க்கும் பொருட்டு குறிஞ்சி நகர் மக்கள் நலச் சங்கம் சார்பில் பூஙகா அமைத்து பராமரிப்பு செய்ய அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார்.

புதிய பேரூந்து நிலைய வளாகத்தில் வார்டு 4, பிளாக் 33, நகரளவு எண் 4151 பகுதியிலுள்ள காலியிடத்தில் நகராட்சி பொறியாளர், மேற்பார்வையில் பூஙகா அமைத்து பராமரிப்பு செய்ய குறிஞ்சிமலர் மக்கள் நலச்சஙகத்திற்கு அனுமதி வழ்ஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** 1) பூஙகா அமைக்கும் இடத்தினை சுற்றி வேலி அமைத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

2) பூஙகா அமைப்பது குறித்த டிசைன் தயாரித்து நகராட்சி பொறியர் அனுமதி பெற வேண்டும்

3) மற்றும் வழக்கமான இதர நிபந்தனைகளுக்குட்பட வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழஙகலாம்.

எப். 20739/07

**<u>தீர்மான எண் : 715</u>**

மேற்படி இடத்தில் நகராட்சி மூலம் சிறுவர் பூஙகா அமைத்து நகராட்சி மூலம் பராமரிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

**41.** இந்நகராட்சி வார்டு எண் 20, கடற்கரை குடியிருப்பு பகுதிகளான ரோச் காலனி, பனிமயநகர், மினி சகாயபுரம், குரூஸ் பர்னாந்து காலனி, வேளாஙகன்னி நகர், லையன்ஸ் டவுண், சகாயபுரம், ஆகியவைகளுக்கு சொத்துவரி சதுர அடிக்கு 1. 70 பைசா என்று கூடுதலாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், அதனை எதிர்த்து குடியிருப்போர் நலச் சஙகம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கின் தீர்ப்பில் மேற்படி பகுதி குடியிருப்பு பகுதி என்பதால் சதுர அடிக்கு ரூ. 0. 40 பைசா என குறைத்து நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மன்றப் பொருள் வைக்கப்பட்டதில் நகர்மன்றம் தனது தீர்மான எண் 338 நாள் 29–5–2007– இல் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யவும், மதிப்பு மாற்றி நிர்ணயம் செய்து மேற்படி பகுதிகளில் சொத்துவரி விதிக்க அரசு அனுமதி பெற்று செயல்படுத்த தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

| வஎண் | இடம் | ஏற்கனவே உள்ள மண்டலம் மற்றும் மதிப்பு | குறைத்து நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள மண்டலம் மற்றும் மதிப்பு |
|---|---|---|---|
| 1 | ரோச் காலனி | ஈ 1. 70 | ஆ 0. 80 |
| 2 | லையன்ஸ் டவுண் | ஈ 1. 70 | ஆ 0. 80 |
| 3 | சகாயபுரம் | ஈ 1. 70 | அ 0. 40 |
| 4 | பனிமயநகர் | ஈ 1. 70 | அ 0. 40 |
| 5 | மினிசகாயபுரம் | ஈ 1. 70 | அ 0. 40 |
| 6 | குரூஸ்பர்னாந்து காலனி | ஈ 1. 70 | அ 0. 40 |
| 7 | வேளாஙகன்னி நகர் | ஈ 1. 70 | அ 0. 40 |

அதன் அடிப்படையில் மேற்படி பொருள் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தை தொடர்பு கொண்ட பொழுது மேற்படி பொருள் தொடர்பாக நகராட்சி சார்பில் தொடுக்கப்பட்ட மேல் முறையீட்டு வழக்கினை வாபஸ் பெறவும், இப்பகுதி வணிகப் பகுதியின்

தொடர்ச்சியாக இல்லாமல் 1998ம் வருடத்தில் புதிதாக குடியிருப்புகள் உருவான பகுதி என்பதால் மேற்படி பகுதிக்கு நகர்மன்றமே மண்டல மதிப்பினை நிர்ணயம்செய்து சொத்துவரி விதித்து அறிவிப்பு அனுப்பலாம் என அறிவுரை பெறப்பட்டது. எனவே மேற்குறிப்பிட்ட பகுதிகளுக்கு மேற்படி அட்டவணையில் கண்டுள்ளபடி மண்டல மதிப்பு நிர்ணயம் செய்து புதிதாக கேட்பு அறிவிப்புகள் அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு**</u> அனுமதிக்கலாம்.

அ8. 8707/04

<u>**தீர்மான எண் : 716**</u>

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

42. 12–வது நிதிக்குழு பரிந்துரைத்திட்டம் 2005–06 திடக் கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் முதல்நிலை சேகரிப்பு பணிக்கு மீத சேமிப்புத்தொகையில் 6 எண்ணங்கள் மூன்று சக்கர சைக்கிள் வாங்குவதற்கு மன்றம் தனது தீர்மானம் எண் 396 நாள் 31–7–2007–இல் அனுமதித்ததின்படி மூன்று சக்கர சைக்கிள் வாங்குவதற்கு 14–11–2007–இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வஎண் | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் 1 எண்ணம் (with bin 6 Nos.) | விலை விகிதம் 1 எண்ணம் (without bin) |
|---|---|---|---|
| 1 | எம்/எஸ். நாகப்பா இண்டஸ்ட்ரீஸ், காரைக்குடி | ரூ 17,900/– | ரூ 17,250/– |
| 2 | எம்/எஸ். A. 3088 மதுரை கிழக்கு அக்ரோ இன்ஜினியரிங அண்டு சர்வீஸ் கோ–ஆப்ரேட்டிவ் | ரூ 16,500/– | ரூ 16,000/– |

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் முறையே ரூ 16,500/– மற்றும் ரூ 16,000/– கொடுத்துள்ள எம்/எஸ். A3088 மதுரை கிழக்கு அக்ரோ இன்ஜினியரிங அண்டு சர்விஸ் கோ–ஆப்ரேட்டிவ் விலை விகிதத்தினை அங்கீகரிக்கலாம்.

நகஎண் 21306/2007/இ1

<u>**தீர்மான எண் : 717**</u>

அலுவலகக் குறிப்புப்படி குறைவான விலைவிகிதம் அங்கீகரிக்கப்பட்டது.

நகர்மன்றம், தூத்துக்குடி
நாள் 22–11–2007

தலைவர்,
நகர்மன்றம், தூத்துக்குடி